**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No. 210/2015**

**Prosecution Witness : 10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : ராமராஜ் | | **Caste** | : | |
| **Father's Name** | : ராமசாமி | | **Calling** | : | டிரைவர் |
| **Village** | : முருநெல்லிக்கோட்டை | | **Religion** | : | |
| **Taluk** | : வேடசந்துார் | | **Age** | : | **56/2026** |
| | | | **Dated** | : | **05.08.2026** |

**05.08.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 9 **திரு. ராமராஜ்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 10** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் தற்போது வேடசந்துார் முருநெல்லிக்கோட்டையில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 2014 வேடசந்துார் கே.சி.பால் நிறுவனத்தில் டிரைவாக வேலை செய்துவந்தேன். எதிரி பெருமாள் என்ற மணி எங்கள் நிறுவனத்தில் வேலை செய்துவந்தார். நான் கே.சி.பால் நிறுவனத்தில் உள் வேலை டிரைவராக வேலை செய்துவந்தேன். பெருமாள் என்ற மணி பால் பாக்கெட்டுகளை லாரியில் ஏற்றிக்கொண்டு வெளி மாவட்டங்களுக்கு கொண்டுசெல்லும் பணியை செய்துவந்தார்.

கடந்த 01.06.2014ம் தேதி இரவு 8.00 மணியில் இருந்து மறுநாள் காலை 8.00 மணிவரை வேடசந்துார் கே.சி.பால் நிறுவனத்தில் எனக்கு இரவு வேலை. 02.06.2014ம் தேதி காலை 4.45 மணிக்கு பெருமாள் என்ற மணி ஓட்டிவந்த ஈச்சர் லாரி நிறுவனத்திற்குள் வந்தது. அவர் தனக்கு சோர்வாக இருப்பதாக சொல்லி லாரியிலேயே படுத்துவிட்டார். அதன் பின்பு வண்டியில் இருந்த பால் டப்பாக்களை இறக்கிவைத்துள்ளார்கள். நான் காலை 7.45 மணிக்கு TN 57 AE 4986 ஈச்சர் லாரியை எடுத்து நிறுவனத்திற்குள் உள்ள வொர்க் ஷாப்பில் நிறுத்தினேன். அப்போது லாரிக்குள் எவ்வித பெட்டியும் இல்லை. பின்பு 15 நாட்கள் கழித்து பணம் வரவில்லை என நிறுவனத்தில் பேசிக்கொண்டார்கள். அது சம்பந்தமாகபுகார் அளித்ததாகசொன்னார்கள். போலிசார் வந்துவிசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இருந்தும் குறுக்கு விசாரணை – இல்லை**</u>

<u>**மறு விசாரணை**</u>

**இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.08.05 17:27:26 +0530

Judicial Magistrate No.II

Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No. 210/2015**

**Prosecution Witness : 9**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : செல்வகுமார் | **Caste** | : |
| **Father's Name** | : பழனிச்சாமி | **Calling** | : கே.சி.பால் ஊழியர்(ஓய்வு) |
| **Village** | : தங்கச்சியம்மாள்பட்டி | **Religion** | : |
| **Taluk** | : வேடசந்தூர் | **Age** | : 61/2026 |
| | | **Dated** | : 05.08.2026 |

**05.08.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 8 **திரு. செல்வகுமார்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 9** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>

நான் தற்போது வேடசந்தூர் தங்கச்சியம்மாள்பட்டி குடியிருந்து வருகிறேன். கே.சி.பால் நிறுவனத்தில் செக்ரியூட்டியாக வேலை செய்துஓய்வுபெற்றுவிட்டேன். எதிரி பெருமாள் என்ற மணி எங்கள் நிறுவனத்தில் டிரைவராக வேலை செய்துவந்தார். கடந்த 01.06.2014ம் தேதி இரவு 10.00 மணிமுதல் 02.06.2014ம் தேதி காலை 8.00 மணி வரை நான் வேடசந்தூர் கே.சி.பால் தலைமை அலுவலகத்தில் மெயின் வாசல் செக்ரியூட்டியாக பணிபுரிந்தேன்.

என்னிடம் தான் நிறுவனத்திற்கு உள்ளே மற்றும் வெளியே செல்லும் வாகனங்கள் பற்றி பதிவேடுகள் இருக்கும். அதில் பதிவு செய்துதான் வாகனங்களை அனுப்புவோம். 02.06.2014ம் தேதி காலை 4.40 மணிக்கு TN 57 AE 4986 ஈச்சர் லாரி டிரைவராக பெருமாள் என்ற மணி தஞ்சாவூரில் இருந்து வேடசந்தூர் தலைமை அலுவலகத்திற்கு லாரியை ஓட்டிவந்தார். லாரியை பரிசோதனை செய்தேன். அதில் காலியான பால் டப்பாக்கள் மட்டும் இருந்தது. அதில் வேறு பொருட்கள் ஏதும் இல்லை. அதனை எனது பதிவேட்டில் பதிவு செய்துகொண்டேன்.

10 நாட்களுக்கு பிறகு நிறுவனத்தில் 02.06.2014ம் தேதி அன்று வந்த லாரியில் பணம் இல்லை என சொன்னார்கள். புகார் கொடுத்ததாக கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இருந்தும் குறுக்கு விசாரணை – இல்லை**

**மறு விசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.08.05 17:27:33 +0530

Judicial Magistrate No.II

Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No. 210/2015**

**Prosecution Witness : 8**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : பழனிச்சாமி | **Caste** | : | |
| **Father's Name** | : முத்துச்சாமி | **Calling** | : | கூலி |
| **Village** | : பெருமாள்கவுண்டன்பட்டி | **Religion** | : | |
| **Taluk** | : வேடசந்தூர் | **Age** | : | **42/2026** |
| | | **Dated** | : | **05.08.2026** |

**05.08.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 4 **திரு. பழனிச்சாமி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 8** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது வேடசந்தூர் பெருமாள் கவுண்டன்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்துவருகிறேன். கடந்த 2014ம் வருடம் வேடசந்தூர் கே.சி.பால் நிறுவனத்தில் சேல்ஸ்மேனாக வேலை செய்துவந்தேன். எதிரி பெருமாள் என்ற மணி எங்கள் நிறுவனத்தில் டிரைவராக வேலை செய்துவந்தார்.

நான் தஞ்சாவூரில் உள்ள கே.சி.பால் கிளையில் நானும் அன்பழகனும் தங்கி வேலை செய்துவந்தோம். வேடசந்தூரில் இருந்து அனுப்பப்பட்டும் பால் பாக்கெட்டுகளை விற்பனை செய்து வசூலிக்கும் தொகையை வேடசந்தூரில் இருந்து வரும் பால் வண்டி டிரைவரிடம் அலுமனிய பெட்டியில் வைத்து கொடுத்து அனுப்புவது வழக்கம். அதுபோல் 01.06.2014ம் தேதி தஞ்சாவூர் கே.சி.பால் கிளையில் இருந்து வசூலான தொகை ரூ.10,34,822/- பணத்தை அன்று வேடசந்தூரில் இருந்து பால் ஏற்றிவந்த பெருமாள் என்ற மணியிடம் இரவு 11.30 மணியளவில் நானும் அன்பழகனும் 2 அலுமனிய பெட்டியில் வைத்து கொடுத்தனுப்பினோம். அதற்கு கேட்டில் உள்ள டெஸ்ட்பேட்ஜ் ரிஜிஸ்டரில் எதிரியிடம் கையொப்பம் வாங்கினோம்.

பின்பு நாங்கள் அனுப்பிய பணத்தை எதிரி தலைமை அலுவலகத்தில் கொடுக்கவில்லை என கேள்விப்பட்டேன். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க புகார் அளித்துள்ளார்கள். போலிசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இருந்தும் குறுக்கு விசாரணை – இல்லை**

**மறு விசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.08.05 17:27:38 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No. 210/2015**

**Prosecution Witness : 7**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : அன்பழகன் | **Caste** | : | |
| **Father's Name** | : சீனிவாசன் | **Calling** | : | தனியார் நிறுவன வேலை |
| **Village** | : பஞ்சநதிகுளம் | **Religion** | : | |
| **Taluk** | : வேதாரண்யம், நாகப்பட்டினம் | **Age** | : | **65/2026** |
| | | **Dated** | : | **05.08.2026** |

**05.08.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 2 **திரு. அன்பழகன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 7** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>

நான் தற்போது நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்ய தாலுகா பஞ்சநதிகுளத்தில் குடியிருந்து பிரியா பால் நிறுவனத்தில் கேசியராக வேலை செய்து வருகிறேன். கடந்த 2014ம் வருடம் வரை தஞ்சாவூர் மாவட்டம் ஊத்துப்பட்டியில் உள்ள கே.சி.பால் நிறுவனத்தில் வேலை செய்துவந்தேன். என்னுடன் 5 நபர்கள் வேலை செய்துவந்தார்கள்.

எங்கள் நிறுவனத்திற்கு வேடசந்தூரில் உள்ள தலைமை அலுவலகத்தில் இருந்து சுமார் 25,000 லிட்டர்கள் வரை ஈச்சர் லாரியில் அனுப்பிவைப்பார்கள். அதைப்பெற்றுக்கொண்டு சுற்றுவட்டார பகுதிகளில் பிரித்து விற்பனைக்கு அனுப்புவோம். சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து வசூல் செய்யும் பணத்தை இரவு கணக்கு பார்த்து கணக்காளர் கே.சி.பால் வங்கி கணக்கில் செலுத்திவிடுவார். மாதம் ஒரு சில முறை பணத்தை ரொக்கமாக ஈச்சர் லாரியில் வரும் டிரைவரிடம் வேடசந்தூர் தலைமை அலுவலகத்திற்கு கொடுத்து அனுப்புவோம்.

எதிரி பெருமாள் என்ற மணி வேடசந்தூர் தலைமை அலுவலகத்தில் டிரைவராக வேலை செய்துவந்தார். தஞ்சாவூர் நிறுவனத்தின் 31.05.2014ம் தேதியிலான வசூல் தொகையான ரூ.10,34,822/- பணத்தை நானும் பழனிச்சாமியும் இரு அலுமனிய பெட்டியில் வைத்து அன்று பால் ஏற்றி வந்த எதிரி பெருமாள் என்ற மணியிடம் 01.06.2014ம் தேதி 11.00 மணிக்கு கொடுத்து அனுப்பிவைத்தோம். எதிரி டெஸ்ட் பேட்ஜ் ரிஜிஸ்டரில் கையொப்பம் செய்தார். அவர் அங்கிருந்து கிளம்பிவிட்டார். மறுநாள் எதிரி மணியிடம் போன் மூலம் பணத்தை ஒப்படைக்கப்பட்டதா என கேட்டபோது அவர் தான் சோர்வாக இருப்பதால் லாரியிலே படுத்துவிட்டதாகவும் வேடசந்தூர் தலைமை அலுவலகத்தில் அன்றைய பொறுப்பு அலுவலர் பீட்டர் என்பவரிடம் லாரியில் இருந்த பணப்பெட்டிகளை எடுத்துக்கொள்ளுமாறு தகவல் தெரிவித்தார்.

பின்பு 15 தேதிக்கு மேல் வேடசந்தூர் தலைமை அலுவலகத்தில் இருந்து தஞ்சை கிளை வசூல் தொகை வரவில்லை என கேட்டார்கள். நான் 01.06.2014ம் தேதியே கொடுத்து அனுப்பிவிட்டோம் என்று சொன்னேன். ஆனால் பணம் தலைமை அலுவலகத்தில் பெறப்படவில்லை என பின்னிட்டு தெரியவந்தது. அது சம்பந்தமாக நிர்வாகம் காவல் நிலையத்தில் புகார் அளித்ததாக சொன்னார்கள். சம்பவம் தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில்  வழக்கறிஞர் ஆஜர் இருந்தும் குறுக்கு விசாரணை – இல்லை</u>**

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.08.05 17:27:44 +0530

Judicial Magistrate No.II
Dindigul.